2011 ஜனவரி 10]

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் நான்காவது முறையாக முதல்வராக இருந்தபோது 2000 ஆண்டில் அறிவிக்கப்பட்ட அந்த செல்லூர் இரயில்வே பாலப் பணி முழுமை பெற்றிருக்கிறது. அதைத் திறப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் தேதி பெறப்பட இருக்கிறது. அந்த இரயில்வே சாலையை மதுரை மக்கள் பயன்படுத்துவதற்கு நிச்சயமாக விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 10, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

10—

அங்கன்வாடி கட்டடம்

***110175—திரு. அ. தமிழரசு:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, செல்லப்பிள்ளைக்குட்டை காலனி பகுதியில் புதிய அங்கன்வாடி மையக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஓமலூர் தொகுதி செல்லப்பிள்ளைக்குட்டை காலனி பகுதியில் புதிய அங்கன்வாடி மையக் கட்டடம், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.3 இலட்சம் ஒதுக்கீடு பெறப்பட்டு, கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு.

முற்பகல் 10-45

திரு. அ. தமிழரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓமலூர் ஒன்றியம் செல்லப்பிள்ளைக்குட்டை காலனி பகுதியில்

[2011 ஜனவரி 10

ஆதி திராவிடர் மக்கள் நலன் கருதி மாணவர்கள் கல்வி பெறுவதற்கு அங்கன்வாடி மையக் கட்டடம் கட்ட வேண்டுமென்ற கோரிக்கை வந்ததன் அடிப்படையிலே, இங்கு நமது மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் அங்கன்வாடி மையத்திற்கு, சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலேயிருந்து குறைந்தபட்சம் 5 இடங்களுக்காவது ஒதுக்கித் தரவேண்டுமென்ற அந்தக் கோரிக்கையின் அடிப்படையிலே நாங்கள் அங்கு சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலே நிதியை ஒதுக்கினோம்; அப்படி ஒதுக்கியும் அங்கு இப்பொழுது கட்ட முடியாத நிலை இருக்கிறது. அங்கே அரசு இடம் இருந்தும், அங்கு மாவட்ட ஆட்சித் தலைவருடைய அனுமதி கிடைத்தும், அந்த ஒப்பந்ததாரர் போய் அங்கே பணி துவங்கியும், பொது மக்களுடைய ஒத்துழைப்பு இல்லாமல், அந்த இடத்திலே இன்னும் கட்ட முடியாத நிலை இருக்கிறது, கட்டப்படவில்லை. எனவே, அதனை மாற்றி வேறு இடத்திலே நான் கட்டி இருக்கிறேன். எனவே, இங்கே அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும், அரசினுடைய கவனத்திற்கும் நான் கொண்டு வருவதெல்லாம், சட்டமன்ற உறுப்பினர் நிதி ஒதுக்கி, மாவட்ட ஆட்சித் தலைவர் அனுமதி கிடைத்தும், இப்பொழுது நாம் கட்ட முடியாத கட்டடங்கள் நிறைய இருக்கின்றன. எனவே, இந்தத் தடைகளை நீக்குவதற்கு, அரசு இடங்களை ஒதுக்கி உடனடியாக அங்கு கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களும், அரசும் நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருடைய அந்தக் கருத்தை நிச்சயமாக அரசு கவனத்தில் எடுத்து, அந்தக் கட்டடப் பணிகளை விரைந்து முடிக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு.

2011 ஜனவரி 10]

திரு. அ. தமிழரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது SSA திட்டத்திலேயும் கூடுதல் பள்ளிக் கட்டடம் கட்டுவதற்கான நிதி ஒதுக்கப்பட்டு, அந்த நிதி நீண்டகாலமாக இருந்து, கட்டடங்கள் கட்டப்படாத நிலை இருக்கின்றன. அந்த நிதி திரும்பிச் சென்றிருக்கிறது. இப்பொழுது எனது ஓமலூர் ஒன்றியத்திலே, சர்க்கரைச்சட்டிப்பட்டி ஊராட்சி என்ற பகுதிக்கு கூடுதல் பள்ளிக் கட்டடங்கள் கட்டுவதற்கு, நிதி வந்து, இப்பொழுது இடம் இல்லாமல் இருக்கிறது. அங்கு அரசு புறம்போக்கு நிலம், மேய்ச்சல் புறம்போக்கு நிலம் எனவும், கோட்டகம், கவுண்டன்பட்டி போன்ற கிராமங்களிலே கோயில் நிலம் என்றும் இருக்கிறது. அந்த மாதிரி நிலங்களிலே அந்த நிதி திரும்பச் செல்லாமல், அந்தக் கட்டடம் கட்டுவதற்கான முயற்சியை அமைச்சர் அவர்களும், அரசும் எடுக்குமா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் கேட்கின்ற அந்த SSA திட்டமானது நம்முடைய சமூக நலத் துறையின்கீழ் நிறைவேற்றப்படவில்லை. மாண்புமிகு உறுப்பினர் இதற்கு தனி வினா எழுப்பும்போது, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் உரிய பதில் அளிப்பார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கன்வாடி பள்ளிக் கட்டடம் குறித்து, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருடைய மேம்பாட்டு நிதியில், அதற்கான நிதி ஒதுக்கவேண்டுமென்று மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுடைய துறையின் சார்பாக ஆணை பிறப்பிக்கப்பட்டு, வழிகாட்டல் நெறிமுறைகளும் வகுக்கப்பட்டிருக்கின்றன. நான் இந்த ஆண்டே என்னுடைய பண்ருட்டி சட்டமன்றத் தொகுதியில் 15 அங்கன்வாடி கட்டடம் கட்டுவதற்காக நிதி ஒதுக்கித் தந்தேன். மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர் திரு. தமிழரசு அவர்கள் சொன்னதுபோல், மாவட்ட

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இதனால், குழந்தைகளுக்குத் தரமான கல்வி அளிக்க வேண்டும் என்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உயரிய கனவு நனவாகியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு இலவச மற்றும் கட்டாயக் கல்விச் சட்ட விதிகளின்படி, பின்தங்கிய பிரிவுகளைச் சேர்ந்த 2,31,404 குழந்தைகளுக்கு, தனியார் பள்ளிகளில் பயிலும் வாய்ப்பை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு அளித்துள்ளது. இதற்கென, 2013-2014 மற்றும் 2014-2015 ஆம் ஆண்டுகளுக்கு தனியார் பள்ளிகளில் பயிலும் இக்குழந்தைகளுக்கான கல்விக் கட்டணத்தை திருப்பி அளிப்பதற்காக, 97.05 கோடி ரூபாய் நிதியை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு வழங்கியுள்ளது. கற்றல்-கற்பித்தல் முறைகளை மேம்படுத்துவதற்காக, ஒலி ஒளிக் காட்சிகளின் மூலம் பயிற்றுவித்தல் போன்ற பல்வேறு தொழில்நுட்ப யுக்திகள் மாணவர்களுக்குப் பெரிதும் பயனளித்துள்ளன. இதனால், பத்தாவது மற்றும் பன்னிரெண்டாவது வகுப்புகளில் பயிலும் மாணவர்களின் தேர்ச்சி விகிதம் 2011 ஆம் ஆண்டில் 85.30 சதவீதம் மற்றும் 85.90 சதவீதமாக இருந்த நிலை மாறி, 2015 ஆம் ஆண்டில் முறையே, 92.90 சதவீதம் (மேசையைத் தட்டும் ஒலி) மற்றும் 90.60 சதவீதமாக உயர்ந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-45

78. பள்ளிகளில் தரமான கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களது அரசு உயர் முன்னுரிமை அளித்து வருகிறது. கூடுதல் வகுப்பறைகள், அறிவியல் ஆய்வகங்கள், குடிநீர் வசதிகள், சுற்றுச் சுவர்கள், மாணவ மாணவியர்களுக்கு தனித்தனி கழிவறைகள் போன்ற கட்டமைப்பு வசதிகள் 4,165.95 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அனைத்துப் பள்ளிகளிலும் போதிய குடிநீர் மற்றும் கழிவறை வசதிகளை வழங்குவதற்காக, நபார்டு வங்கியின் நிதியுதவியோடு 650.68 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. கடந்த ஐந்தாண்டுகளில், அனைவருக்கும் கல்வி இயக்கத்தின்கீழ் 6,124 கோடி ரூபாயும், தேசிய இடைநிலைக் கல்வி இயக்கத்தின்கீழ் 2,069 கோடி ரூபாயும் வழங்கப்பட்டுள்ளன. 2016-2017 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் அனைவருக்கும் கல்வி இயக்கத்திற்காக 2,329.15 கோடி ரூபாயும், தேசிய இடைநிலைக் கல்வி இயக்கத்திற்காக 1,139.52 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

2011 ஜனவரி 10]

அரசு கொடுத்த அந்த வழிகாட்டல் நெறிமுறைகளுக்கு ஏற்றவாறு நாங்கள் அந்த நிதியைப் பயன்படுத்தி இதுபோன்ற கட்டடங்கள் உருவாக்க முடியும். அதற்கான சூழலையும் அரசு ஏற்படுத்தித் தருவதற்கு முன்வருமா என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன் அவர்களுடைய கருத்தையும் அரசு பரிசிலித்து உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

முற்பகல் 10-50

4. அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் கூட்டத் தொடர் முழுவதும் பேரவைப் பணிகளினின்று நீக்கி வைக்கப்பெற்றதை மறுபரிசீலனை செய்யக் கோருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செங்கோட்டையன், என்னவென்று சொல்லுங்கள்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய 9 சட்டமன்ற உறுப்பினர்கள் இந்தக் கூட்டத் தொடர் முழுவதும் நீக்கப்பட்டதுடன், அவர்களுக்கு இருக்கின்ற உரிமைகள் அனைத்தும் இரத்து செய்யப்படும் என்றும் நீங்கள் அறிவித்திருக்கிறீர்கள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோரையும் இல்லையே! எல்லோரையும் சொல்லவில்லையே!